# யா / நாவற்குழி மகா வித்தியாலயம்




# பரிசில் நாள்

## அதிபர் அறிக்கை

11-11-2013

# பாடசாலைக் கீதம்

உயிரினும் இனியநம் உயர் வாழ்வினையே
உணர்வொடு போற்றுவோம் வாரீர்!
ஓங்குக கல்வி செல்வ மோடீகை
ஒளி திகழ் தெய்வீக வாழ்க்கை
ஓங்குக தேச சுதந்திர மெங்கும்
ஓங்குக சமரச வேட்கை

உயிரினும்

ஒரு குலமென உயிர் வாழ்வோம்
உளமதில் நடுநிலை சேர்வோம்
உயர்தர நமதுயர் மகா வித்தியாலயம்
உருவளர் நாவற்குழிதனையே நினைவோம்
ஓங்குக தேச சுதந்திர மெங்கும்
ஓங்குக சமரச வேட்கை.

S. Thayamithie

# யா / நாவற்குழி மகா வித்தியாலயம்

## பரிசில் நாள் – 2013

இடம் :– கனகசபை செல்லப்பா அரங்கு (பாடசாலை)

காலம்:– 11.11.2013 திங்கட்கிழமை

நேரம்:– பி.ப 1.30 மணி

**தலைவர்**

**திருமதி.வ. மேகலிங்கம்** அவர்கள்

(கல்லூரி முதல்வர்)

**முதன்மை விருந்தினர்**

**பேராசிரியர் மா. சின்னத்தம்பி** அவர்கள்

(கல்வியியல் பேராசிரியர்,
கல்வியியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

**சிறப்பு விருந்தினர்**

**உயர்திரு. ப. சிவநாதன்** அவர்கள்

(ஓய்வு நிலை புகையிரத நிலைய அதிபர்,
நாவற்குழி)

– பாடசாலைச் சமூகம் –

தங்களை உவகையுடன் அழைக்கின்றோம்.

# நிகழ்ச்சி

- கொடியேற்றல்
- விருந்தினர்களை வரவேற்றல்
- மங்கல விளக்கேற்றல்
- இறை வணக்கம்
- ஆசியுரை
- வரவேற்புரை
- அதிபர் அறிக்கை
- பரிசில் வழங்கல்
- சிறப்பு விருந்தினர் உரை
- பிரதம விருந்தினர் உரை
- நன்றியுரை
- கலை நிகழ்வுகள்

- விழாக்குழுவினர்-

# அதிபர் அறிக்கை

எமது கல்லூரியின் பரிசில் நாள் நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக வருகை தந்து கல்லூரிச் சமூகத்தை பெருமைப் படுத்திக் கொண்டிருக்கும் கல்வியியல் துறை பேராசிரியர் மேதகு மா. சின்னத்தம்பி அவர்களே! ஆசியுரை வழங்கி இறை அருளுடன் நிகழ்வை ஆரம்பித்து வைக்க வருகை தந்திருக்கும் குருமார்களே! சிறப்பு விருந்தினர் உயர்திரு. ப. சிவநாதன் அவர்களே! விழாவைப் பெருமைப்படுத்தும் கல்வி மான்களே! நலன் விரும்பிகளே! பெற்றோர்களே! பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களே! மாணவச் செல்வங்களே! அனைவரையும் எல்லாம் வல்ல இறைவனின் பாதார விந்தங்களைப் பணிந்து வருக வருக என வரவேற்று மகிழ்ச்சியடைகின்றேன்.

கல்விக் கடலிலே நீந்தி சாதனைகள் படைத்திடத் துடிக்கும் சின்னஞ்சிறிய குழந்தைகளின் முயற்சிகளைப் பாராட்டி பென்னம்பெரிய சாதனைகள் படைத்திடத்தூண்டுவதே இன்றைய நாளின் நோக்கமாகும்.

இன்றைய இனிய நன்னாளுக்கு மிக மிகப் பொருத்த மானவராக எம்முன் எழுந்து இனிதே வருகை தந்த பேராசான் மாண்பு மிகு மா.சின்னத்தம்பி அவர்களே! தங்களின் வருகையால் நாவற்குழிப் பிரதேசம் புளகாங்கிதம் அடைகின்றது. கல்விப் புலத்திலே தாங்கள் தடம்பதித்த தடயங்களை நாம் இந்நேரத்தில் ஒரு தடவை மீட்டுப் பார்த்தல் பொருத்தமானதென்று நினைக் கின்றோம். பல்லாயிரக் கணக்கான மாணவ மணிகளை உருவாக்கிய தங்களின் பணியில் யானும் தங்களின் மாணவி என்று சொல்லிக் கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

யா/ இந்துக்கல்லூரி, யா/ வைத்தீஸ்வரக்கல்லூரியின் மாணவனாகத் திகழ்ந்த தாங்கள் பொருளியல் சிறப்புப் பட்டத் தோடு M.A சிறப்பு M.Phill வரை பல பட்டங்களைப் பெற்று கல்வி உலகிற்கே பெருமை சேர்த்துள்ளீர்கள். உலகிலுள்ள தலை சிறந்த பல்கலைக்கழகங்களில் ஒன்றான கனடாவின் ரொறன்ரோ பல்கலைக்கழகத்தில் **2011** ஆம் ஆண்டில் வருகைப் பேராசிரியராகக்

கடமையாற்றியுள்ளீர்கள் என்பதை அறியும் பொழுது தாங்கள் பிறந்த மண்ணிற்கு சேர்க்கக் கூடிய மிகப்பெரிய பெருமையை, புகழை சேர்த்துள்ளீர்கள் என்பது மகிழ்ச்சியானதே. கொழும்பு பல்கலைக்கழகம், திறந்த பல்கலைக்கழகம், தேசிய கல்வி நிறுவகம், தேசிய கல்வி ஆணைக்குழு என்பவற்றுடன் இணைந்து கல்வி உலகிற்கு தாங்கள் ஆற்றி வரும் கல்விப்பணி வியப்பிற்குரியது. தாங்கள் இதுவரை 32 நூல்களை எழுதி தங்கள் மாணவர்களினதும் வாசகர்களினதும் தேவைகளைப் பூர்த்தி செய்துள்ளீர்கள். தங்களின் இரண்டு நூல்களுக்கு வடக்கு கிழக்கிற்கான சிறந்த விருது கிடைக்கப் பெற்றமை மிகவும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். தாங்கள் இது வரையில் 65 செயலமர்வுகளை நடாத்தியுள்ளீர்கள். தங்களால் நடாத்தப்படும் செயலமர்வுகள் தனித்துவம் வாய்ந்தவையாயிருக்கும். வித்தியாசமான பரிமானங்களில் தங்களின் சிந்தனைகள் கருத்துக்கள் இருக்கும். புதுமையானதும் முற்றிலும் மாறுபட்டதும் சம காலத்திற்கு பொருந்தக் கூடியதுமான கல்விச் சிந்தனைகளே தங்களின் கருத்தாகும். இத்தகைய அளப்பரிய கல்விப்பணிகளை எம் இளஞ் சந்ததிகளுக்கு ஆற்றிவரும் தங்களை இருகரம் கூப்பி சிரம் தாழ்த்தி வரவேற்று பெரு மகிழ்ச்சியடைகின்றோம்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்புற அமர்ந்திருக்கும் ஓய்வுநிலை புகையிரத நிலைய அதிபரும் இப் பாடசாலையின் பழைய மாணவனுமாகிய உயர்திரு. ப.சிவநாதன் அவர்களே! கனடா வாழ் பழைய மாணவனும் அண்மையில் அமரராகி விட்டவரும் பரிசில் நாள் நிகழ்வை நடந்த நான்கு வருடங்களாக தொடர்ந்து பாடசாலைக்கு நிதிப் பங்களிப்பு செய்தவருமாகிய ஸ்ரீ காந்தன் (பாபு) அவர்களின் தன்னலமற்ற கல்விப் பணிகள் காரணமாக தங்களின் அன்புச் சகோதரன் தங்களின் குடும்பங்களை கௌரவப்படுத்தியுள்ளார். அவரின் இழப்பு பாடசாலைச் சமூகத்திற்கு மறக்க முடியாதது. அவர் முன்னெடுத்த கல்விப் பணிகளை தாங்களும் தங்கள் சகோதரி திருமதி ஜெயந்தி சிவராசா குடும்பமும்முன்னெடுத்துச் செல்வது எம்மையல்லாம் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியுள்ளது. இச்சந்தர்ப்பத்தில் பாடசாலைச் சமூகம் சார்பாக தங்களை வருக வருக என அன்பாக வரவேற்கின்றோம்.



ஆசிரிய ஆளணி விபரம் - 2013



அனர்த்த பாதுகாப்புக் குழு - 2013

# எமது வித்தியாலயத்தின்
# ஆசிரிய ஆளணி

எமது பாடசாலையில் 34 நிரந்தர ஆசிரியர்களும் இரண்டு பகுதி நேர ஆசிரியர்களும் 3 தொண்டர் ஆசிரியர்களும் கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இப்பிரதேசத்திற்கு கடமையாற்ற வருகின்ற ஆசிரியர்கள் பிரதேச மாணவர்களின் நிலமைகளை அறிந்து தன்னலமற்ற தமது சேவையை ஆற்றக் கூடிய நேர் மனப்பாங்குடன் இருக்கின்றமை பாராட்டுக்குரியது.

இப்பாடசாலையின் வரலாற்றிலே ஆசிரியர் பறறாக்குறை தொடர்ச்சியாக பாதிப்பாகத்தான் இருந்திருக்கின்றது. ஆனால் இவ்வருடம் புதிதாகப் பொறுப்பேற்ற வலயக்கல்விப்பணிப்பாளர் உயர் திரு. சு.கிருஷ்ணகுமார் அவர்கள் எமது பாடசாலையின் நிலையை நேரில் கண்டறிந்து உடனடித்தீர்வாக 7ஆசிரியர்களை இப்பாடசாலைக்கு வழங்கியதன் மூலம் எமதுபாடசாலை மாணவர் களின் கல்விச் செயற்பாட்டில் உயர்வுகளை ஏற்படுத்துவதற்கு பெரும்பங்காற்றியுள்ளார். அவர் தம் பணிக்காக இப்பிரதேசம் சார்பாக இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## இடமாற்றம் பெற்று வந்தோர்

செல்வி .இ. பிறமேளா
திருமதி. சு. சிறீகாந்தன்
திருமதி. செ. சிறீரங்க நாதன்
திருமதி. சி. சிவகுமார்
திரு. தி. மதியரன்
திரு. த. தெய்வேந்திரன் - 2 நாட்கள்
திரு. சி. சத்தியசாயிபாபா

❖ எமது பாடசாலையில் தமிழ் பாடத்தைச் சிறப்பான முறையில் கற்பித்த ஆசிரியர் திருமதி கமலாதேவி கோபால கிருஷ்ண அவர்கள் பாடசாலை வரும் வேளையில் 17.09.2013 இல்

விபத்துக்குள்ளாகி 21.09.2013 இல் அமரத்துவமடைந்தார். இவ்வேளை அவரை நினைவு கூர்ந்து அவரின் ஆத்ம சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

## இடமாற்றம் பெற்றுச் சென்றோர்

திரு.க. மகிந்தன்

திரு.க. இந்திரராசா

திருமதி. சா. ஞானதேவன்

செல்வி. சே. மதிவதனி

செல்வி. சி. சிவாதரி

திருமதி. ந. சிவநாதன்

## பதவி உயர்வு பெற்றுச் சென்றோர்

திரு. சு. சிவானந்தன் SLPS - II

## எமது வித்தியாலயத்தில் தற்போது கடமையாற்றுகின்ற ஆசிரியர்களின் விபரம்

| | |
|---|---|
| கலைப்பட்டதாரிகள் | 16 |
| வர்த்தகப் பட்டதாரி | 01 |
| கல்வி மாணி | 02 |
| விசேட பயிற்சி பெற்றோர் | 07 |
| நுண்கலை மாணி | 04 |
| கற்பித்தலில் தேசிய டிப்ளோமா | 04 |
| தொண்டர் ஆசிரியர் | 03 |
| ஒப்பந்த அடிப்படையிலான சிங்கள ஆசிரியர் | 01 |

1. திருமதி. வ. மேகலிங்கம்
Principal SLPSI SLEAS III - B.A Dip in Edu
2. திருமதி சு. செல்வராஜா
Deputy Principal SLTS I - B.A Dip in Edu
3. திருமதி சி. நடராஜகுமார்
SLTS 2 -I - B.A Dip in Edu (Mertit) Hindusim Trd
4. திரு. திசர்வேஸ்வரன்
SLTS 2- I - Maths Trd
5. திருமதி. ஞா. மரியநாயகம்
SLTS 2 -I - R.C Trd
6. திருமதி. வ. சோமசேகரம்
SLTS 2 -I - B.A, Dip in Edu (Merit) Science Trd
7. செல்வி. ச. தயாநிதி
SLTS 2 - II - B.Ed, Maths Trd
8. திருமதி. ந. குகராஜ்
SLTS 2 - II - Engilsh Trd
9. திருமதி. நா. செல்வன்
SLTS 2 - II - Primary Trd
10. திரு. ஞா. செல்வநாயகம்
SLTS 2 - II - Social Studies Trd
11. திரு. சி. நித்தியானந்தராசா
SLTS 2 - II - B.BA Dip in Edu
12. திரு. இ. சுதன்
SLTS 2 - II - B.Ed. primary Trd
13. திருமதி. க. சந்திராதேவி
SLTS 2 - II - Primary Trd
14. திருமதி. இ. இராஜதுரை
SLTS 2 - II - B.A Dip in Edu

15. திரு.சூ.ஜெபநேசன்

SLTS 2 - II - R.C Trd

16. திருமதி பி. அங்கஷன்

SLTS 2 - II - B.A Dip in Edu, Primary Trd

17. திருமதி.செ. சிறீரங்கநாதன்

SLTS 2 - II - N. Dip in Teach Primary)

18. திருமதி. இ. நித்தியானந்தராஜா

SLTS 2 - II - N. Dip in Teach(primary)

19. திருமதி. த. ஜீவபாலன்

SLTS 2 - II - N. Dip in Teach (Science)

20. திருமதி.சு.வசீகரன்

SLTS 2 - II - B.F.A (Dance) Dip in Edu

21. திரு. தி. தர்மராஜா

SLTS 2 - II - B.A Dip in Edu

22. திரு. சி. சத்திய சாய்பவா

SLTS 2 - II - B.A (Hous) Dip in Edu

23. திருமதி. க. அண்ணாமலை

SLTS 2 - II - B.F.A (Music)

24. திருமதி. பி. தமிழ்ச்செல்வன்

SLTS 2 - II - B.A Dip in Edu

25. திரு. ஐ. தெய்வேந்திரன்

SLTS 2 - II - Agriculture Trd

26. திருமதி. இ. சிவகுருநாதன்

SLTS 3 - I - Primary Trd

27. திரு.சு. சுதர்சன்

SLTS 3 - I - B.A (Hons) Dip in Edu

28. திரு.க.முரளி

SLTS 3 - I - BCA

29. திரு.தி.மதிபரன்

SLTS 3 - I - B.A N Dip in Teach(Social Studies)

30. திருமதி. சு. சிறீகாந்தன்

SLTS 3 - I - B.A (Hons) Dip in Edu

31. திருமதி. சி.சிவகுமார்

SLTS 3 - I - N. Dip in Teach ( Home Economics)

32. திருமதி.க.அன்பழகன்

SLTS 3 - II - B.A

33. திருமதி ஜெ. சத்தியசீலன்

SLTS 3 - I - BFA (Art)

34. திருமதி. க. செல்வமூர்த்தி

SLTS 3 - I - B.FA (Music)

35. செல்வி செ. நிரஞ்சினி

SLTS 3 - II - Dip in physcal edu

36. திருமதி .கோ. சந்திரகுமார்

SLTS 2 - I - Home Economics Trd

37. திருமதி ஆஷா தமயந்தி - Dip in Sinhala

38. திருமதி. த. ஜெயக்குமார் - G.C.E A/L

39. செல்வி. வே. தேவறஞ்சினி - G.C.E A/L

40. செல்வி.கு. விேனோஜா - G.C.E A/L

## கல்வி சாரா ஊழியர்கள்

1. திரு.சி. இராஜேந்திரன் - ஆய்வு கூட உதவியாளர்
2. திரு.செ. அழகராசா - காவலாளி
3. திரு.நா. சதீஸ்குமார் - சுகாதாரத் தொழிலாளி
4. திருமதி.ய.நந்தபாலா - பாடசாலைத் தொழிலாளி

## பாடசாலைத் தொண்டர்

திரு.க. சுந்தரலிங்கம்

# கல்வி சாரா ஆளணியினர்

எமது பாடசாலையின் வளர்ச்சியில் எம்முடன் இணைந்து அரும் பணியாற்றி வரும் கல்வி சாரா ஆளணியினரை மகிழ்வுடன் பாராட்டுகின்றேன். ஆய்வு கூட உதவியாளராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கும் திரு.சி. இராஜேந்திரன், இரவு நேர காவலாளியாகக் கடமையாற்றிக் கொண்டிருக்கும் திரு.செ.அழகராசா இவ்வருடம் புதிதாக நியமனம் பெற்று வந்த சுகாதாரத் தொழிலாளி திரு.நா. சதீஸ்குமார் பாடசாலைத்தொழிலாளியாகக் கடமையாற்றும் திருமதி.ய.நந்தபாலாஆகியோரின் தொடர்ச்சியான சேவை இப்பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்கு மிகவும் காத்திரமானதாகும். இவர்கள் ஆற்றிக் கொண்டிருக்கும் தன்னலமற்ற சேவையை நன்றியுடன் பாராட்டுகின்றேன்.

## 2013 இல் மாணவர் தொகை

| தரம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 1-5 | 132 | 140 | 272 |
| 6-9 | 136 | 125 | 261 |
| 10-13 | 65 | 95 | 160 |
| மொத்தம் | 333 | 360 | 693 |

## தரம் 1 முதல் 13 வரை 24 சமாந்தர வகுப்புக்களில் கற்றல் செயற்பாடுகள் நடைபெறுகின்றன

### பெறுபேறுகள்

**தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை**

| | | |
|---|---|---|
| தோற்றியோர் | - | 44 |
| சித்தியடைந்தோர் | - | 03 |
| 100 இற்கு மேல் புள்ளி பெற்றோர் | - | 10 |

**சித்தியடைந்த மாணவர்கள்**

| | | |
|---|---|---|
| செல்வி. ஸ்ரீ. கதிர்விழி | - | 178 |
| செல்வி.பு.கஜானா | - | 166 |
| செல்வி.வி.சுவேதா | - | 160 |

**க.பொ.த சாதாரண தரப் பரீட்சை**

| | | |
|---|---|---|
| தோற்றியோர் | - | 38 |
| சித்தியடைந்தோர் | - | 23 |

தென்மராட்சி வலய மட்டம் 3ம் இடம்

*க.பொ.த. சாதாரண பரீட்சையில் ICT, வணிகக்கல்வி, நடனம்,கிறிஸ்தவம் ஆகிய பாடங்களுக்கு 100% சித்தி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேற்படி பாடங்களைச் சிறப்பாகக் கற்பித்த ஆசிரியர்கள் திரு.க. முரளி, திரு.சி. நித்தியானந்த ராசா, திருமதி.சு.வசீகரன், திரு.சூ.ஜெபநேசன் அவர்களை மனதாரப் பாராட்டுகின்றேன்.*

**க.பொ.த. உயர்தர பரீட்சை – 2013**

| | | |
|---|---|---|
| தோற்றியோர் | - | 03 |
| பல்கலைக்கழக தகுதி பெற்றோர் | - | 02 |
| சதவீதம் | - | 67% |

# இணைப்பாட விதானச் செயற்பாடுகள்

## இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு

எமது பாடசாலையில் 2012, 2013 ஆம் ஆண்டிற்கான இல்ல மெய்வன்மைப் போட்டிகள் சிறப்பான முறையில் நடைபெற்றன. 2012 ஆம் ஆண்டிற்கான நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளராக இருந்த திரு.கு. பிறேமகாந்தன் அவர்களும் 2013 ஆம் ஆண்டிற்கான நிகழ்வில் தறபோதைய தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் திரு.ஆ. கிருஷ்ணகுமார் அவர்களும் கலந்து சிறப்பித்தமையை இந்நாளில் நாம் நன்றியுடன் நினைவில் கொள்கின்றோம்.

## வலய மட்டமெய் வன்மைப் போட்டி

2012 ஆம் ஆண்டு வலய மட்ட மெய் வன்மைப் போட்டியில் 6 முதலாமிடங்களும் 6 இரண்டாமிடங்களும் 10 மூன்றாம் இடங்களுமாக மொத்தம் 22 இடங்கள் எமது பாடசாலைக்குக் கிடைத்தமை மிகவும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். மாணவர் தம் செயற்பாடுகளுக்கு அயராது உழைத்த ஆசிரிய பெருந்தகை களையும் பழைய மாணவர்களையும் பொறுப்பாக இருந்து செயற்பட்ட ஆசிரியர் திரு.சு. சிவானந்தன் அவர்களையும் மனதாரப் பாராட்டுகின்றேன்.

2013 ஆம் ஆண்டு வலய மட்ட மெய்வன்மைப் போட்டியில் 4 முதலாமிடங்களும் 7 இரண்டாமிடங்களும் மூன்றாமிடமென்று மொத்தம் 22 இடங்கள் கிடைத்தன. அத்தோடு செல்வி. க. ரெபேக்கா வெற்றிக் கேடயம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

பாடசாலைக்குப் பெருமை சேர்ந்த இம் மாணவர்களையும் பயிற்றுவித்த ஆசிரியர்கள் திரு.சூ.ஜெபநேசன் அவர்களையும் செல்வி.செ.நிரஞ்சினி அவர்களையும் நன்றியுடன் பாராட்டு கின்றேன்.

# 2013 தரம் 5 புலமைப்பரிட்சையில் சித்தியடைந்தோர்



ஸ்ரீ. கதிர்விழி
178



பு.கஜானா
166



வி.சுவேதா
160



செல்வி சோபனா ஜெயச்சந்திரன்
மாவட்ட மட்ட சிறுகதை
ஆக்கம் 1ம் இடம்



செல்வன் சுப்பிரமணியம் சுபாஸன்
கணித வினாடி வினாப்போட்டியில்
தேசிய மட்டம் 3ம் இடம்
வடக்கு மாகாணம் 1ம் இடம்



செல்வி க.றெபேக்கா
வலயமட்ட மெய்வன்மைப்போட்டி
1ம் இடம்

# கணிதப் போட்டிகள்

இவ்வாண்டு வலயத்தினால் நடாத்தப்பட்ட கணித வினாடி வினாப் போட்டியில் பங்கு பற்றிய எமது பாடசாலை மாணவர்களான செல்வன் சு.சுபாஸன் இரண்டாமிடத்தையும் ஐ.ஐதுர்சனா மூன்றாம் இடத்தையும் பெற்று மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவாகியிருந்தனர். மாகாண மட்ட கணித வினாடி வினாப் போட்டியில் செல்வன். சு.சுபாஸன் முதலாம் இடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார். அத்தோடு தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்வதற்கான மீள் போட்டியில் பங்கு பற்றி முதலாமிடத்தைப் பெற்று தேசிய கணித திறனாய்வுப் போட்டிக்கு வடக்கு மாகாண அணியில் தன்னையும் இணைத்துக் கொண்டார். தேசிய மட்டத்தில் நடை பெற்ற போட்டியில் 3ம் இடத்தைப் பெற்று, தனது பெயரைப் பதித்துக் கொண்டார். இதறகுரிய பரிசளிப்பு வைபவம் ஹங்வெல இராஜசிங்க தேசிய பாடசாலையில் **04.10.2013** அன்று நடைபெற்றது. அம் மாணவனை நானும் கணித பாட ஆசிரியரும் அழைத்துச் சென்றிருந்தோம். அங்கே அம் மாணவனுக்கு பதக்கம் அணிவிக்கும் போது நான் நேரே பார்த்தது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியாக இருந்தது. அன்றைய நாள் எமது பொன் நாளாக இருந்தது. இதற்காக அம் மாணவனை உளமாரப் பாராட்டுகின்றேன். அத்துடன் தரம் 06 தொடக்கம் அந்த மாணவனை இலட்சியத்தோடு பயிற்றுவித்து தன்னை அர்ப்பணித் துச் செயற்பட்ட ஆசிரியர் செல்வி தயாநிதி சடாட்சரம் அவர்கள் மிகவும் பாராட்டுக்குரியவர்.

# தமிழ்மொழி கலைத்திறன் போட்டி

எமது பாடசாலையில் தமிழ் மொழித்திறனை வளர்ப்பதற் காகவும் வெளிப்பாட்டுத்திறனை வெளிக் கொணர்வதற் காகவும் தமிழ் மன்றங்கள் சிறப்பான முறையில் இயங்கி வருகின்றன. பாடசாலை மட்டத்தில் போட்டிகள் நடாத்தப்பட்டுச் சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்கப்பட்டன. 2012 வலயமட்ட தமிழ்மொழி கலைத்திறன் போட்டியில் நாட்டுக் கூத்து வலய

மட்டம் 1ம் இடமும் மாவட்ட மட்டம் 3ம் இடமும் கிடைத்தது. தனி நடனம் வலய மட்டம் மூன்றாம் இடம் கிடைத்தது. இவ் வருட தமிழ்மொழித்திறன் போட்டியில் முதலாமிடங்கள் இரண்டும் இரண்டாமிடம் ஒன்றும் மூன்றாமிடங்கள் இரண்டும் கிடைத்தன. செல்வி. ஜெ.சோபனா மாவட்ட மட்ட சிறுகதையாக்கப் போட்டியில் முதலாமிடம் பெற்றுள்ளார். இவர்கள் பாடசாலை க்குப் பெருமை சேர்த்துள்ளாரகள். அவர்களைப் பயிற்றுவித்த ஆசிரியர்கள் திரு.கி. தர்மராஜா, திருமதி.க. அண்ணாமலை, திருமதி.சு. வசீகரன், திருமதி. க.செல்வமூர்த்தி ஆகியோரை மனதாரப் பாராட்டுகின்றேன்.

# ICT போட்டிகள்

வலய மட்டத்தினாலான ICT பாட போட்டிகளில் பங்கு பற்றிய எமது பாடசாலை மாணவர்களில் செல்வன் சு.சுபாஸன், செல்வன் இ. சுவின்சன் ஆகியோர் நடப்பு ஆண்டில் நடைபெற்ற போட்டியில் சான்றிதழ்களைப் பெற்றுள்ளனர்.

அத்தோடு சென்ற ஆண்டு க.பொ.த சாதாரண பரீட்சைக்குத் தோற்றிய 7 மாணவர்களும் விசேட சித்திகளுடன் சித்தியடைந் துள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆசிரியர் மேற்கொண்ட முயற்சி யினால் 100% சித்தி வீதம் கிடைத்தது. மேற்படி சித்திவீதம் கிடைத்தது எமது பாடசாலைக்குப் பெருமையாகும்.

அது மட்டுமல்ல க.பொ.த உயர்தரத்திலும் அவ் ஆசிரியர் தனது கற்பிததல் திறனை வெளிப்படுத்தியுள்ளார். கடந்த ஆண்டு நடைபெற்ற பொது தகவல் தொழில்நுட்பம் (Git) பாடத்திற்கு தோற்றிய 16 மாணவர்களில் 13 மாணவர்கள் திறமைச் சித்திகளுடன் சித்தியடைந்துள்ளமை எமது பாடசாலையின் திருப்பு முனையாக அமைந்தது. இது 81.25% சித்தியாகும். இயலாத மாணவர்களையும் இயல வைக்கும் திறனுள்ள எமது ICT பாட ஆசிரியர் திரு.க. முரளி அவர்களை நன்றியுடன் மனதாரப் பாராட்டுகின்றேன்.

# விஞ்ஞானப் போட்டிகள்

மாணவர்களின் திறமை ஆற்றல் அறிவை வெளிக்கொணரும் நோக்கில் நடாத்தப்படும் போட்டிகளில் விஞ்ஞானப் போட்டியும் ஒன்றாகும். அவ்வகையில் 2012 இல் வலய மட்டத்தினாலான விஞ்ஞானப் போட்டியில் பங்கு பற்றிய செல்வன் சு.சுபாஸன் வலய மட்டத்தில் முதலாமிடத்தையும் மாகாண மட்டப் போட்டியில் நான்காமிடத்தையும் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளார். அத்தோடு நடப்பு ஆண்டில் நடந்த வலய மட்ட விஞ்ஞானப் போட்டியில் மூன்றாமிடத்தைப் பெற்று மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளார் என்பது குறிப்பிட த்தக்கது. அம் மாணவனைப் பாராட்டுவதோடு அதற்காக மிகத் திறமையாகச் செயற்பட்டு மேலதிக வினாக் கொத்துக்களை வழங்கி பயிற்சியளித்துக் கொண்டிருக்கும் எமது பாடசாலையின் விஞ்ஞான பாட ஆசிரியர் திருமதி வளர்மதி சோம சேகரம் அவர்களை நன்றியுடன் மனதாரப் பாராட்டுகின்றேன்.

# இந்துமா மன்றம்

எமது கலைகலாசார பண்பாட்டு விழுமியங்களை பேணு வதற்கும் மாணவர்களது திறன்களை வெளிக்கொணர்வதற்கும் களமாக இந்துமா மன்றம் காணப்படுகின்றது.

வெள்ளிக்கிழமைகளில் பக்தி பூர்வமான வழிபாடுகளை மேற்கொள்வதற்கான வழிமுறைகளை ஏற்படுத்திக் கொடுப்பதுடன் திட்டமிடல், வழிகாட்டல்களையும் மேற்கொள்கின்றது.

வருடந்தோறும் நவராத்திரி விழாக்களை சிறப்பாக கொண்டாடு வதுடன் கோலம் போடுதல், தோரணம் பின்னுதல், மாலை கட்டுதல் முதலான போட்டிகளையும் பண்பாட்டு விழுமியங்களை கடத்துவதற்காக மாணவர்களிடையே பிரிவு ரீதியாக நடாத்தி வருவதுடன் பரிசில்கள் வழங்கியும் ஊக்கமளிகின்றது. இப் போட்டிகளில சமய ரீதியாக அல்லாது அனைத்து மாணவர்களும் உள்ளீர்க்கப்படுதல் சிறப்புக்குரியது.

அத்தோடு நவராத்திரி காலங்களில் பொருத்தமான அறிஞர்கள் தெரிவு செய்யப்பட்டு விருந்தினர்களாக அழைக்கப்பட்டு

மாணவாகள் ஆற்றுப்படுத்தலும் இந்துமா மன்ற உன்னத பணியாக உள்ளமை குறிப்பிடக் கூடியதாகும். இந்த வருட வாணிவிழாவின் போது முதன்மை விருந்தினராக கலந்து சிறப்பித்த சுவாமி ஜாக்ரத சைதன்யா அவர்கள் சிறந்த கருத்துரை வழங்கியமை குறிப்பிடத் தக்கது. இவ்வாறான இந்துமா மன்றங்களின் செய்றபாடுகளை மிகத் திறமையாக நடாத்திக் கொண்டிருக்கும் இந்துமா மன்றப் பொறுப்பாசிரியர் திரு.சுப்பிரமணியம் சுதர்ஸன் அவர்களை மனதாரப் பாராட்டுகின்றேன்.

## ஆங்கில மொழித்திறன் போட்டி

எமது பாடசாலை மட்ட ஆங்கில தினப் போட்டிகளில் பெரும்பாலான மாணவர்கள் பங்கு பற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் வலய மட்டப் போட்டிகளில் பங்கு பற்றி சான்றிதழ்களைப் பெற்று வருகின்றனர்.

இவ் வருடம் நடைபெற்ற வலய மட்டப் போட்டிகளில் செல்வி அபிராமி சுரேஸ்கரன் தரம் 11 Copy writing இல் இரண்டாம் இடம் பெற்றுக் கொண்டார். ஆங்கில நாடகம் (ஆரம்பப் பிரிவு) 3ம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

அத்துடன் மாணவர்களின் ஆங்கில மொழித்திறனை விருத்தி செய்யும் வகையில் ஆங்கில மன்றத்தினூடாக செவ்வாய், வியாழக்கிழமைகளில் காலைப் பிரார்த்தனை ஆங்கில மொழியில் நடைபெற்று வருகின்றது. மாணவர்கள் மிகவும் மகிழ்ச்சியாகவும் ஆர்வத்துடனும் பங்கு கொண்டு நிகழ்ச்சிகளை தரமானதாக வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. மாணவர்களை வழிப்படுத்தி வரும் ஆங்கில ஆசிரியர்கள் திருமதி.ந.குகராஜ் அவர்களையும் திரு.க.முரளி அவர்களையும் மனதாரப் பாராட்டுகின்றேன்.



பிரதம விருந்தினர் பாடசாலை கொடி
ஏற்றி வைக்கிறார்.



பிரதம விருந்தினர் நடன அறையை திறந்து
வைக்கிறார்.

# சிங்கள மொழித்திறன் போட்டி

தமிழ் மாணவர்களிடையே அவர்களின் இரண்டாம் மொழியாகிய சிங்கள மொழித்திறனை ஏற்படுத்துவதற்காக தரம் 6 -9 வரையுள்ள மாணவர்களுக்கு சிங்கள மொழித்திறன் போட்டிகள் நடாத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் சென்ற வருடமும், இவ்வருடமும் 18 மாணவர்கள் சிங்கள மொழித்திறனில் வெற்றியீட்டி மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவாகியிருந்தமை பாராட்டுக்குரிய விடயமாகும். எமது பாடசாலையில் தரம் 1- 9 வரையுள்ள மாணவர்களுக்கு சிங்கள மொழியை சிறப்பாக் கற்பித்து வரும் திருமதி ஆஷா தமயந்தி அவர்களை நான் உளமாரப் பாராட்டுகின்றேன். எமது பாடசாலையிலுள்ள தரம் 9 வரையுள்ள அனைத்து மாணவர்களும் சிஙகள மொழியை எழுதவும், வாசிக்கவும் திறனுடையவர்களாகக் காணப்படுகின்றமை பாராட்டுக்குரிய விடயமாகும்.

# கற்றல் வள நிலையம்

இது மாணவர்களது கற்றலை மேம்படுத்த உதவும் மையமாக வுள்ளது. இது சிறுவர் பிரிவு, உசாத்துணை, இரவல் வழங்கல் என வகைப்படுத்தப்படுத்தப்பட்டுள்ளது.

கற்றல் வள நிலையம் வெறுமனே புத்தகத் தேட்டமான இடமாகவல்லாது அனைத்துத்தர சிந்தனையாளர்களது நாட்ட மையம் எனும் சிந்தனைக்கேற்ப எமது நிலையமும் செயற்பட முனைந்துள்ளது. அவ்வகையில் அருகிவரும் தொல்பொருட்கள் பலவற்றைச் சேகரித்துக் காட்சிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத் தக்கது.

நாணயங்கள் உள்நாடு, வெளிநாடு என வகைப்படுத்தப்பட்டுச் சேகரிக்கப்பட்டுள்ளதுடன் அவற்றின் சிறப்பு, இரகசியத்தன்மை போன்றனவும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

பால்ய பருவத்தினரின் விளையாட்டார்வத்திற்கு வடிகாலாக அமைய வேண்டி சதுரங்கம், கரம் முதலான உள்ளக விளையாட்டுக்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

நூலக தேவைக்கும், ஆசிரியர்களின் பாவனைக்குமென ஒரு கணனி பயன்பாட்டில் பதிவுடன் பேணப்படுகிறது.

கல்வியமைச்சின் புதிய சுற்று நிருபத்துக்கமைய கற்றல் வள நிலையத்திற்கான பணிக்கூற்று, தூரநோக்கு, யாப்பு, வரலாறு, நூலகர் குறிப்பேடு என்பன உருவாக்கப்பட்டும், தொகுத்தும் ஆவணப்படுத்தப்படுத்தப்பட்டுள்ளன.

தென்மராட்சி வலயத்தின் பாடசாலைகளின் ஆசிரிய நூலகர்கள் கடந்த 23.06.2013 அன்று எமது கற்றல் வள நிலையத்தை மாதிரி நிலையமாகத் தரிசித்து சென்றமை பதிவு செய்யப்பட வேண்டியுள்ளது. தென்மராட்சி வலய கற்றல் வள நிலையங்களுக்கிடையிலான போட்டியில் எமது வளநிலையம் இரண்டாமிடம் பெற்றமை குறிப்பிடத் தக்கது. இதற்காக கற்றல் வள நிலைய ஆசிரிய நூலகர் திருமதி சுபாசினி சீறிகாந்தன் அவர்களை நான் மனதாரப் பாராட்டு கின்றேன்.

## உயர்தர மாணவர் மன்றம்

மேற்படி மாணவர் மன்றமானது செல்வன் ம. புஸ்பரூபன் தலைமையில் மிகவும் உயிர்த்துடிப்புடன் இயங்கி வருகின்றது. பாடசாலையில் நடைபெறுகின்ற அனைத்து நிகழ்வுகளும் சிறப்புற நடைபெறுவதற்கு தமது ஒத்துழைப்பை வழங்கி வருகின்றது. அத்தோடு 05.06.2013 அன்று இம் மன்றம் தனது வருடாந்த ஒன்றுகூடலைப் பாடசாலை மட்டத்தில் மிகச் சிறப்பாக நடாத்தியுள்ளது. இதில் முதன்மை விருந்தினராக H.N.B வங்கியின் கைதடிக்கிளை முகாமையாளர் திரு.S.பரணிதரன் கலந்து சிறப்பித்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். இம்மன்றம் சிறப்புற இயங்குவதற்கு உயர்தரத்தில் கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களும் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றமையும் குறிப்பிடத்தக்க விடயமாகவே காணப்படுகின்றது. அந்த வகையில் அம்மன்ற வளர்ச்சிக்கு காரணமாக உள்ள அனைவருக்கும் எனது நன்றிகள். உயர்தர மாணவர் மன்றம் இளந்தளிர் எனும் சஞ்சிகையை வெளியிட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# ஆரம்பக்கல்வி

ஆரம்பக்கல்வியில் 272 மாணவர்கள் கல்வி கற்கின்ற போதிலும் ஆரம்பக்கல்வியில் 7 ஆசிரியர்களே கடமையாற்றிக் கொண்டிருக்கின்றார்கள் 2010 இல் 7 ஆசிரியர்கள் எமது பாடசாலையிலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்றார்கள் 6 மாதங்களுக்கு மேலாக இவர்களுக்கான பதிலீடுகள் கிடைக்காமை காரணமாக நாம் பாரிய பின்னடைவுகளைச் சந்தித்தோம் இருந்த போதிலும் 3 தொண்டர் ஆசிரியர்களை கலவிப் பணியில் ஈடுபடுத்தி மாணவர்களுக்கு எம்மாலான முயற்சிகளைச் செய்திருந்தோம். இதனால் 2011, 2012 இதற்கான புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறு வீழ்ச்சியடைந்தமை மனம் வருந்தத்தக்க விடயமாகும். இதை நிவர்த்தி செய்ய கடமையாற்றியவர்கள் செல்வி.வே. தேவறஞ்சினி, செல்வி.கு. வினோயா, திருமதி. த. ஜெயக்குமார் ஆரம்பக்கல்விப் பரிவிற்கு ஆரம்பக்கல்விப் பிரிவின் பகுதித் தலைவர் செல்வி.க. சந்திராதேவி ஆற்றிய பங்களிப்பு அளப்பரியது. இத்தருணத்தில் அவ் ஆசிரியரை நான் நன்றியுடன் பாராட்டுகின்றேன். அத்துடன் தரம் 5 வகுப்பாசிரியர்களாக இருந்து புலமைப்பரிசில் பரீடசையில் 3 மாணவர்களைச் சித்தியடையச் செய்து 10 மாணவர்கள் 100 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுக் கொள்ள வழி காட்டிய ஆசிரியர்கள் திருமதி நா. செல்வன், திரு.இ.சுதன் ஆகியோரை மனதாரப் பாராட்டு கின்றேன்.

# பரிசில் நாள் நிதி

இப்பாடசாலையில் பழைய மாணவனான கனடா வாழ் அமரர் முத்துராசா சிறீகாந்தன் அவர்கள் 2007,2008,2009, 2010 ஆகிய 4 வருடங்களாக பரிசில் நாளுக்குரிய செலவு முழுவதையும் ஏற்று இந்நிகழ்வினை சிறப்புற நடாத்துவதற்கு இதய பூரவமான பங்களிப்பைச் செய்து கொண்டு வந்தார். துரதிஷ்டவசமாக 11.10.2011 இல் கனடாவில் அமரத்துவமடைந்ததன் காரணமாக 2011 இல் பரிசில் நாள் நிகழ்வினை பிற்போட்டிருந்தோம் தற்போது அவருடைய ஞாபகார்த்தமாக அவரது சகோதரி திருமதி ஜெயந்தி சிவராசா அவர்கள் அனைத்து செலவையும் பொறுப்பேற்பதாகத்

தெரிவித்து பழைய மாணவர் சங்கப் பொருளாளர் திரு.கோ. ஜீவபாலன் மூலம் தேவையான உதவிகளைச் செய்து வருகின்றனர். இந்நேரத்தில் இவர்களை வாழ்த்தி பாராட்டுகின்றேன்.

## பொது நிறுவனங்கள்

எமது பாடசாலையில் அழகியல் பாடங்களுக்கும் மாணவர்கள் வாசிப்புத்திறனை வளர்ப்பதற்கும் ஒரு கற்றல் வள நிலையம் காணப்படாமை ஒரு பெரும் பிரச்சினையாக இருந்து வந்தது. அந்த வகையில் அழகியல் பாடங்களில் ஒன்றான நடன பாடத்திற்கென நடன அறை ஒன்றினையும் கற்றல் வள நிலையத்தினையும் நிர்மாணித்துத்தந்த சேவா லங்கா நிறுவனத்தினருக்கும் எமது நன்றிகள். அத்தோடு எமது பாடசாலைக்கு அத்தியவசியமான சுகாதார அறை (Health unit) ஒன்றினை word vision நிறுவனத்தினர் அமைத்து உதவியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. எமக்கு உதவிய அந் நிறுவனத்தினருக்கும் நன்றிகள்.

## பழைய மாணவர் சங்கம் கனடா

எமது பாடசாலையின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றிக் கொண்டிருக்கும் பழைய மாணவர் சங்க (கனடா) அமைப்பை நாம் ஒரு போதும் மறக்க முடியாது அவர்கள் அங்கு வருடாந்தம் ஒன்றுகூடல் ஒன்றினை நடாத்தி வருவது குறிப்பிடத்தக்து. அந்த வகையில் சென்ற வருட ஒன்றுகூடல் நிகழ்விற்கு என்னையும் பிரதம விருந்தினராக அழைத்திருந்தனர். இறைவன் திருவருளால் நான் அந் நிகழ்விற்கு கலந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது. 01.09.2012 இல் நடைபெற்ற இந் நிகழ்விற்கு 300 இற்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர். பிரதம விருந்தினராக அழைக்கப்பட்ட நான் கனடா மண்ணில் எமது பாடசாலைக் கொடியை ஏற்றியபோது மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தேன். இவ் விழாவிற்கு என்னையும் ஒருவராக அழைத்து கௌரவப்படுத்தியமைக்கு அவ் அமைப்பினருக்கு நன்றி கூற கடமைப்பட்டுள்ளதுடன் எமது பாடசாலைக்கு Multimedia ஒன்றினையும் அன்பளிப்புச் செய்துள்ளனர். இவ்வாறு பாடசாலை யின் பக்க பலமாக உள்ள இவ் அமைப்பு எமக்காக என்றென்றும் உதவிக்கரம் நீட்டும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.



மறவன்புலவு சச்சிதானந்தன் ஐயா அவர்கள் ஒரு தொகுதி நூல்களை அன்பளிப்பு செய்கிறார்.



யா/நாவற்குழி மகா வித்தியாலய கனடா வாழ் பழைய மாணவர் ஒன்று கூடல் நிகழ்வு 01.09.2012 இல் நடந்தபோது கனடா நாட்டில் கல்லூரி அதிபர் பிரதம விருந்தினராகக் கலந்து பாடசாலைக் கொடியை ஏற்று வைக்கிறார்.

# ஊக்குவிப்பு நிதி வழங்குவோர்

எமது பாடசாலையில் கல்வி கற்றுக் க.பொ.த சாதாரணம், உயர்தரம், புலமைப்பரிசில் தேர்வில் சித்தியடைந்த மாணவர்கள் ஐவருக்கு கோவிலாக் கண்டி மேற்கு தச்சந்தோப்பில் வசித்து அமரர்களாகி விட்ட கதிர்காமு கந்தையா, கந்தையா கனகம்மா ஞாபகார்த்தமாக தலா 1000/= வீதம் ஊக்குவிப்பு நிதி திரு.க. மயில்வாகனம் அவர்களால் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

நாவற்குழி இளைஞர் சமூக அபிவிருத்திச்சபை (இலண்டன்) நாவற்குழி சித்தி விநாயகர் சமூக அபிவிருத்திச் சபை ( இலங்கை) ஆகிய இரண்டு அமைப்பும் இணைந்து எமது பாடசாலை மாணவர்கள் 10 பேருக்குத் தலா 5000/= வீதம் மாதந்தோறும் வழங்கி வருகின்றது H.N.B வங்கியினால் ஒரு மாணவருக்கு வருடந்தோறும் 2000/= வீதம் கற்றல் உபகரணங்களுக்கு வழங்கப்பட்டு வருகின் றமை குறிப்பிடத் தக்கது.

நாவற்குழி இராணுவப் பொறுப்பதிகாரி அவர்களினால் எமது பாடசாலையில் கல்வி கற்கும் 4 மாணவர்களுக்குத் தலா 5000/= வீதம் சம்பத் வங்கியில் வைப்பிட்டு வங்கிப் புத்தகம் அம் மாணவர்களிடம் கையளிக்கப்பட்டது.

செல்வி கிருபா வீரசிங்கம் அவர்களின் அனுசரணையுடனான வெளிநாட்டுப்பண உதவி 2000/= வீதம் இரு மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. இத்தகைய பெருமனதுள்ள மகான்களுக்கு எனது நன்றிகள் என்றென்றும் உரித்தாகட்டும்.

# க.பொ.த சாதாரண பரீட்சை - 2012

## சித்தியடைந்த மாணவர் விபரம்

| | | | |
|---|---|---|---|
| 1. | வி.சோபிகா | - | A B C 3S |
| 2. | இ. கஸ்தூரி | - | A 3B 3C S |
| 3. | கு. டுவாரதா | - | A 3C 4S |
| 4. | இ. பிரியந்தினி | - | A 3C 4S |
| 5. | மௌ. தர்சிகா | - | 2A 4C 2S |
| 6. | சி. தர்சினி | - | A B 3C S |
| 7. | ம. வலன்ரீனா | - | A 3B 3C 2S |
| 8. | பா.பிரயதர்சினி | - | 4A B C 3S |
| 9. |ச. லட்சியா | - | 5A 3B |
| 10. | சி.சிந்துயா | - | A 3C 4S |
| 11. | இ.வனோஜா | - | A 2C 5S |
| 12. | ஜீ. சம்சிகா | - | 3A 3B 2C S |
| 13. | ஆ. அன்பரசி | - | A 2C 4S |
| 14. | இ. நிதர்சன் | - | 3A 4B 2C |
| 15. | ஞா.திவாகரன் | - | 4A 3B C S |
| 16. | ச.லதுஷன் | - | A 4C 3S |
| 17. | வு. அம்மினதாப | - | A 4C 3C |
| 18. | ப. பத்மலோஜன் | - | A 6C S |
| 19. | ந. ஜெயநிசாந்தினி | - | A 2C 4S |
| 20. | வி.விதுதரன் | - | A B 3C 2S |
| 21. | இ. தேனுஷா | - | A B 3C 2S |
| 22. | இ. கல்யாணி | - | A B 3C 3S |

# பாடசாலை பெற்றோர் இடைவினை

எமது பாடசாலை மாணவர்களின் பெற்றோர்களில் 75% ஆனோர் மாணவர்களில் அக்கறையுடையவர்களாக காணப்படு கின்றனர். மிகுதி 25% ஆன மாணவர்களின் பெற்றோர்கள் தமது பிள்ளைகளில் அக்கறையற்றவர்களாகக் காணப்படுகின்றனர். பாடசாலைக்கு அவர்கள் சமூகமளிப்பதில்லை. பெற்றோர்கள் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பாமல் தாம் வேலைக்குச் செல்கிறார்கள். இந்த நிலை நீக்கப்பட வேண்டும் என்பதை நாம் விரும்புகின்றோம். வீடுகளுக்குச் சென்றாலும் பெற்றோர்களைச் சந்திக்க முடியாமல் இருக்கின்றோம். இது கவலைக்குரிய விடயமாகும்.

அன்பான பெற்றோர்களே உங்கள் பிள்ளைகள் மீது தயவு செய்து கருணை காட்டுங்கள் அன்பு காட்டுங்கள் எமது வலயக் கல்விப்பணிப்பாளர் 26.09.2013ல் தரம் 11 பெற்றோர்களுக்கு வழங்கிய அறிவுரைகளைப் பின்பற்றுங்கள், உங்கள் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்காக அயராது பாடுபடுங்கள். இது தான் இன்றைய நாளில் உங்களுக்குத் தரும் செய்தியாகும்.

# எதிர்காலத் தேவைகள்

எமது பாடசாலைக்கு 110'x20' கொண்ட இரு மாடிக் கட்டடம் தேவையாகவுள்ளது. அதிபர் அலுவலகம் மற்றும் செயற்பாட் டறைகள் இல்லாமை பெருங் குறைபாடாக இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. கூட்டங்களை நடாத்துவதற்கு ஒரு பல நோக்கு மண்டபம் தேவைப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

# வழிகாட்டல் ஆலோசனை சேவை

எமது பாடசாலையில் வழிகாட்டலும் ஆலோசனையும் பிரிவு சிறப்பாகத் தொழிற்பட்டு மாணவர்களையும் பெற்றோர்களையும் ஆற்றுப்படுத்தும் செயற்பாடுகள் சிறப்பானதாகக் காணப்படு கின்றமை பாராட்டுக்குரியது. சிறுவர் தினமும் உலக உள நல நாள் இரண்டையும் இணைத்து நடாத்தி அனைத்துச் சிறுவர்களுக்கும் பரிசில்கள் வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது. அதனை விட மாணவர்களுக்கு கல்வி மற்றும் தொழில்சார் வாய்ப்புக் களையும் உள ஆதரவுகளையும் வழங்கும் வட மாகாணத்தின் செயற்றிட்டங்களுக்கமைவாக சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் S.சிவரூபன் அவர்களும் இளைஞர் சேவை மன்ற உதவிப் பணிப்பாளர் திரு. வ. ஈஸ்வர ராஜா அவர்களும் தேசிய பாதுகாப்பு அதிகாரி திரு.கு.கௌதமன்அவர்களும் இலங்கைத் தொழிற் பயிற்சிப் போதனையாளர் திரு.S. விஜிதன் அவர்களும் ஆறுதல் உள வளத்துணையாளர் திருமதி மேரி பெனிக்னா பிலிப் அவர்களும் பெறுமதி மிக்க கருத்துக்களை ஆற்றி பெற்றோர்களை வழிப்படுத் தினர். இச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு காரண மாகத் திகழ்ந்த எமது வழிகாட்டலும் ஆலோசனைக்கும் பொறுப் பாக இருந்து அல்லும் பகலும் பாடசாலையிலே நேரத்தைச் செலவிடுபவருமாகிய திருமதி பிரியதர்சினி அங்கஷன் அவர்களை மனதாரப் பாராட்டுகின்றேன்.

# அனர்த்த பாதுகாப்புக் கல்வி

இக் குழுவில் 25 மாணவர்களும் 2 ஆசிரியர்களும் உள்ளனர். இம் மாணவர்களுக்கு எமது பாடசாலையில் பயிற்சிகள் நடைபெற்றன. வேள்ட் விஷன் நிறுவனத்தால் உபகரணங்களும் வழங்கப்பட்டன. அவர்களுக்கான வினா விடைப் போட்டிகளும் நிகழ்த்தப்பட்டு சான்றிதழ்களும் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் சென்ற ஆண்டு வலய மட்ட அனர்த்தப் பாதுகாப்புக் கல்வி தொடர்பான வினா விடைப் போட்டியில் செல்வி கோ. தாரங்கினி 5ம் இடம் பெற்றுள்ளார். இந்த வருடம் நடைபெற்ற போட்டியில் செல்வி கோ.தாரங்கினி 2ம் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதற்கு பொறுப்பாகவுள்ள திருமதி த.ஜீவபாலன் அவர்களையும் திரு.சூ ஜெபநேசனையும் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

# நன்றியுரை

இவ்வினியநாளின் நிறைவாக பாடசாலைச் சமூகத்தின் மீது அக்கறை கொண்ட அனைத்து உள்ளங்களுக்கும் நன்றி கூறுவது தலையாய பண்பாகும். அளப்பரிய கல்விப் பணிகளுக்கு மத்தியிலும் எமக்கென நேரம் ஒதுக்கிய கல்வியியல் துறை பேராசானுக்கு எமது இனிய நன்றிகள் உரித்தாகட்டும். சிறப்பு விருந்தினர் திரு.ப. சிவநாதன் அவர்களுக்கும் பாடசாலைச் சமூகம் நன்றி நல்கின்றது. இங்கே வருகை தந்திருக்கும் ஏனைய கல்வி மான்கள், பெரியோர்கள், அயற் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், நலன் விரும்பிகள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், ஆகியோருக்கு உளங்கனிந்த நன்றிகள்.

இக் காலப் பகுதியில் எமது பாடசாலையின் கல்வி வளர்ச்சியிலே பெருமளவு ஈடுபாடு காட்டிய தென்மராட்சி வலய கல்விப் பணிப்பாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர், வலய உத்தியோகத்தர்கள், கோட்டக்கல்விப்பணிப்பாளர்கள் ஆகியோருக்கு எமது நன்றிகள். இப்பரிசில் நாள் செலவினங்களைப் பொறுப் பேற்று நெறிப்படுத்திக் கொண்டிருக்கும் இப்பாடசாலையின் பழைய மாணவனும் தொழிநுட்ப உத்தியோகத்தருமான திரு.கோ.ஜீவபாலன் அவர்களுக்கும் எமது நன்றிகள். இவ்வறிக்கைக் காக தரவுகளைத் திரட்டி செம்மையான அறிக்கையை அமைக்க உதவிய பகுதித்தலைவர் செல்வி தயாநிதி சடாச்சரம் அவர்களுக்கும் நன்றிகள்.

அத்துடன் இவ்விழா சிறப்புற அமைய என்னுடன் இணைந்து செயலாற்றிய பிரதி அதிபர், பகுதித்தலைவர்கள், ஆசிரியப் பெருந்தகைகள்,கல்வி சாரா ஊழியர்கள், மாணவ தலைவர்கள், மாணவர்கள் அனைவருக்கும் நன்றிகள் உரித்தாகட்டும்.

நன்றி.

அதிபர்,

திருமதி.வ.மேகலிங்கம்

# பரிசில் பெறும் மாணவர் பெயர்

## தரம் - 1

| இல | மாணவர் பெயர் |
|---|---|
| 1. | அ. கபிநிலா |
| 2. | சௌ.பிரவீனா |
| 3. | ஜெ. ஜெயடினோஜன் |
| 4. | ஜெ. சங்கவி |
| 5. | க. அபிசாயினி |
| 6. | யோ. கீர்த்திகா |
| 7. | ந. காயத்திரி |
| 8. | கூ. அபிசேக் |
| 9. | சி.யதுசியா |
| 10. | திவ்வியன் |

## தரம் - 2

| இல | மாணவர் பெயர் |
|---|---|
| 11. | வி. தர்சிகா |
| 12. | ச.மீனுஜா |
| 13. | ம.மதீசன் |
| 14. | வெ. சாலேம்ராஜ் |
| 15. | தீ. வதுர்ஷன் |
| 16. | யோ . பிரியங்கா |
| 17. | நி. நிஷாருகா ஆஷொக் |
| 18. | தெ. கிருஷிகன் |
| 19. | ஜ. ஞானக்குமரன் |
| 20. | கி.நிதுயா |
| 21. | நா.அபிசுவா |
| 22. | த. தர்சிகா |
| 23. | பா. அபிசா |

# தரம் - 3 (2012)

| இலக்கம் | மாணவர் பெயர் | முதலாமிடம் | இரண்டாமிடம் | மூன்றாமிடம் |
|---|---|---|---|---|
| 24 | சு.வேணுயா | தமிழ்<br>சுற்றாடல்<br>ஆங்கிலம்<br>கிறிஸ்தவம் | | கணிதம் |
| 25 | ஜீ. பரீசன் | கணிதம்<br>சைவசமயம் | தமிழ்<br>சுற்றாடல்<br>ஆங்கிலம் | |
| 26 | ஆ.ஜெசியா | | கிறிஸ்தவம் | தமிழ் |
| 27 | ந. சஞ்ஜய் | | கணிதம் | |
| 28 | ஜ. அபிநயா | | சைவசமயம் | சுற்றாடல் |
| 29 | சி.பவானி | | | சைவசமயம் |
| 30 | லூா. டிஷான் | | | கிறிஸ்தவம் |
| 31 | ம.மதுமிதா | | | ஆங்கிலம் |

# தரம் - 4 (2012)

| இலக்கம் | மாணவர் பெயர் | முதலாமிடம் | இரண்டாமிடம் | மூன்றாமிடம் |
|---|---|---|---|---|
| 32 | ஸ்ரீ. கதிர்விழி | தமிழ்<br>கணிதம்<br>சுற்றாடல்<br>சைவசமயம் | ஆங்கிலம் | சிங்களம் |
| 33 | பு.கஜானா | ஆங்கிலம்<br>சிங்களம் | தமிழ்<br>கணிதம்<br>சுற்றாடல்<br>சைவசமயம் | |
| 34 | வி.சுவேதா | | சுற்றாடல்<br>சிங்களம் | தமிழ் |
| 35 | ச.நிலானி | | | கணிதம்<br>ஆங்கிலம்<br>சைவசமயம் |
| 36 | அ. இமின்சிகா | கிறிஸ்தவம் | | |
| 37 | மு.சாந்திமதி | | கிறிஸ்தவம் | |
| 38 | வ. யதுர்சனா | | | கிறிஸ்தவம் |

# தரம் - 5 (2012)

| இலக்கம் | மாணவர் பெயர் | முதலாமிடம் | இரண்டாமிடம் | மூன்றாமிடம் |
|---|---|---|---|---|
| 39 | க.கஜீபன் | சிங்களம்<br>சைவசமயம் | தமிழ்<br>சுற்றாடல் | கணிதம் |
| 40 | யோ.ஷமிதா | கணிதம்<br>தமிழ்<br>ஆங்கிலம்<br>சுற்றாடல்<br>சைவசமயம் | | |
| 41 | ஐ. உமையாள் | | சைவசமயம் | தமிழ்<br>சுற்றாடல் |
| 42 | நா. அபிகா | சுற்றாடல்<br>கிறிஸ்தவம் | கணிதம் | |
| 43 | சி.பானுஜா | | ஆங்கிலம் | |
| 44 | ச.நிஷானி | | | ஆங்கிலம் |
| 45 | அ. ஜெயசீவி | | | சிங்களம் |
| 46 | த.தர்சிகா | | சிங்களம் | |

# தரம் - 6 (2012)

| இலக்கம் | மாணவர் பெயர் | முதலாமிடம் | இரண்டாமிடம் | மூன்றாமிடம் |
|---|---|---|---|---|
| 47 | து.மதுஜா | தமிழ்<br>சைவசமயம்<br>சிங்களம் | வரலாறு<br>வா.தேர்ச்சி | விஞ்ஞானம்<br>செய்முறைத் தொ.நுட்பம்<br>சங்கீதம் |
| 48 | ச.ரஜீவன் | கணிதம்<br>ஆங்கிலம்<br>வரலாறு<br>வா.தேர்ச்சி<br>சங்கீதம் | சுகாதாரம்<br>செய்முறைத் தொ.நுட்பம் | தமிழ்<br>சைவசமயம் |
| 49 | ஜ. சானுஜா | தமிழ்<br>விஞ்ஞானம்<br>செய்முறைத் தொ.நுட்பம் | சைவசமயம்<br>சங்கீதம்<br>சிங்களம் | புவியியல்<br>வா.தேர்ச்சி |
| 50 | தி.பிரியங்கா | கணிதம்<br>புவியியல் | சுகாதாரம்<br>நடனம் | ஆங்கிலம்<br>வரலாறு<br>சிங்களம் |
| 51 | ச.சங்கீதராஜ் | சித்திரம் | ஆங்கிலம் | கணிதம் |
| 52 | சு.சங்கீர்த்தன் | | விஞ்ஞானம் | |
| 53 | யோ. யோஷிகா | றோமன் கத்தோலிக்கம் (R.C) | | |
| 54 | சி.சிவசுகன்யா | | | றோமன் கத்தோலிக்கம் (R.C) |
| 55 | மே. சிப்போறா | | றோமன் கத்தோலிக்கம் (R.C) | |
| 56 | ம.மதுசா | நடனம் | | |
| 57 | யோ. அபிசா | | | நடனம் |
| 58 | ம.திருமாறன் | | சித்திரம் | |
| 59 | கி.கிரிதர்சன் | | | சித்திரம் |
| 60 | செ. வினுசன் | சுகாதாரம் | | |

# தரம் - 7 (2012)

| இலக்கம் | மாணவர் பெயர் | முதலாமிடம் | இரண்டாமிடம் | மூன்றாமிடம் |
|---|---|---|---|---|
| 61 | அ.அஜினா | தமிழ்<br>சைவசமயம்<br>கணிதம்<br>விஞ்ஞானம்<br>ஆங்கிலம்<br>வரலாறு<br>புவியியல்<br>வா.தேர்ச்சி<br>சுகாதாரம் | சிங்களம் | நடனம் |
| 62 | த.கீர்த்தனா | நடனம்<br>செ. தொழில்<br>நுட்பம் | தமிழ்<br>கணிதம்<br>விஞ்ஞானம்<br>ஆங்கிலம்<br>வரலாறு | சைவசமயம்<br>வா.தேர்ச்சி<br>சுகாதாரம் |
| 63 | த.கஜந்தா | | சைவசமயம்<br>சங்கீதம்<br>சுகாதாரம் | வரலாறு<br>சிங்களம் |
| 64 | வ.சகானா | | வா.தேர்ச்சி<br>நடனம் | ஆங்கிலம்<br>கணிதம்<br>விஞ்ஞானம் |
| 65 | ஜெயக்குமார் | சித்திரம்<br>சிங்களம் | செ.தொழில்<br>நுட்பம் | தமிழ்<br>புவியியல் |
| 66 | டே.சுஜீபா | | R.C | |
| 67 | அ.அனோஜா | | | R.C |
| 68 | ஞ. டிலக்சிகா | R.C<br>சங்கீதம் | | |
| 69 | ப.கபிலராஜ் | | புவியியல் | |
| 70 | அ.அனந்தா | | | சங்கீதம்<br>செ.தொழில்<br>நுட்பம் |
| 71 | இ. சஞ்சீவன் | | சித்திரம் | |
| 72 | கு. டினோஜன் | | | சித்திரம் |

# தரம் - 8 (2012)

| இலக்கம் | மாணவர் பெயர் | முதலாமிடம் | இரண்டாமிடம் | மூன்றாமிடம் |
|---|---|---|---|---|
| 73 | சு.சுபாஷன் | தமிழ்<br>சைவசமயம்<br>கணிதம்<br>விஞ்ஞானம்<br>ஆங்கிலம்<br>வரலாறு<br>புவியியல்<br>வா.தேர்ச்சி<br>சுகாதாரம்<br>செ.தொழி நுட்பம் | | நடனம்<br>சிங்களம் |
| 74 | செ.டினிஷா | நடனம் | சிங்களம்<br>வரலாறு | செ. தொழில் நுட்பம் |
| 75 | யோ.சபினா | நடனம்<br>சிங்களம் | தமிழ்<br>கணிதம் | சைவசமயம் |
| 76 | ப.நதீஸ் | | | புவியியல்<br>கணிதம்<br>விஞ்ஞானம் |
| 77 | பு.நிருஷன் | சங்கீதம் | சைவசமயம்<br>வத.தேர்ச்சி<br>சுகாதாரம் | தமிழ்<br>வரலாறு |
| 78 | வி.பத்மஜன் | | சங்கீதம் | விஞ்ஞானம்<br>புவியியல் |
| 79 | தி.திசா | | செ.தொழில் நுட்பம் | நடனம் |
| 80 | கி.சர்மியா | | | சுகாதாரம் |
| 81 | ச.ஜெனார்த்தன் | சித்திரம் | | R.C |
| 82 | டெ.அஜித் | | சித்திரம் | |
| 83 | கு.தனுசியா | | | சித்திரம் |
| 84 | சு.சதீஸன் | | | சங்கீதம் |
| 85 | க. ரெபேக்கா | R.C | ஆங்கிலம் | |
| 86 | சி.மிதுர்ஜா | | R.C | |
| 87 | த.நிர்ஜா | | | ஆங்கிலம் |

# தரம் - 9 (2012)

| இலக்கம் | மாணவர் பெயர் | முதலாமிடம் | இரண்டாமிடம் | மூன்றாமிடம் |
|---|---|---|---|---|
| 88 | ஐ.ஐதுர்ஷனா | சைவசமயம்<br>கணிதம்<br>ஆங்கிலம்<br>வரலாறு<br>சுகாதாரம்<br>நடனம்<br>சிங்களம் | விஞ்ஞானம் | தமிழ்<br>வா.தேர்ச்சி |
| 89 | அ.அர்ஜீன் | விஞ்ஞானம்<br>புவியியல்<br>செ.தொழில்<br>நுட்பம் | தமிழ்<br>கணிதம் | சுகாதாரம் |
| 90 | இ.ஜனுஷா | சங்கீதம் | வரலாறு<br>வா.தேர்ச்சி<br>சுகாதாரம் | கணிதம்<br>விஞ்ஞானம்<br>புயியியல்<br>செ.தொழில்<br>நுட்பம் |
| 91 | வி.லவலக்ஷனா | வா.தேர்ச்சி | சைவசமயம்<br>புவியியல்<br>ஆங்கிலம் | சங்கீதம் |
| 92 | வ.மதுசன் | தமிழ் | செ.தொழில்<br>நுட்பம் | சைவசமயம்<br>வரலாறு |
| 93 | ப.நித்தியா | சங்கீதம் | | ஆங்கிலம் |
| 94 | கு.சுஜீபன் | சித்திரம் | R.C | |
| 95 | ர.ரஜீவன் | | சித்திரம் | |
| 96 | ர. கஜித்குமார் | | | R.C |
| 97 | ஜே. ஜெயப்பிரிதா | R.C | | |
| 98 | க.நிசாளினி | | நடனம் | |
| 99 | வ.சயந்தினி | | | நடனம்<br>சிங்களம் |
| 100 | இ. காயத்திரி | சிங்களம் | | |

# தரம் - 10 (2012)

| இலக்கம் | மாணவர் பெயர் | முதலாமிடம் | இரண்டாமிடம் | மூன்றாமிடம் |
|---|---|---|---|---|
| 101 | கோ.தாரங்கினி | வரலாறு<br>விஞ்ஞானம்<br>புவியியல்<br>I.C.T | தமிழ்<br>சைவசமயம்<br>சங்கீதம் | கணிதம் |
| 102 | சு.அபிராமி | தமிழ்<br>சைவசமயம்<br>சுகாதாரம் | கணிதம்<br>விஞ்ஞானம்<br>ஆங்கிலம்<br>புவியியல் | |
| 103 | பா.திலக்ஷன் | கணிதம்<br>வர்த்தகம் | I.C.T | சைவசமயம்<br>ஆங்கிலம் |
| 104 | கு.நிவேஜா | சங்கீதம்<br>R.C<br>ஆங்கிலம் | வரலாறு<br>குடியியல்<br>விவசாயம் | |
| 105 | சு.சுவிஸ்னா | குடியியல்<br>விவசாயம் | R.C | சங்கீதம் |
| 106 | கு.டிலக்ஷன் | | சுகாதாரம் | புவியியல் |
| 107 | நா.இவன்சலின் | | சித்திரம் | R.C<br>விவசாயம் |
| 108 | சி.சுபன்யா | | | சுகாதாரம் |
| 109 | க.சகானா | | நடனம் | |
| 110 | ஜே. ஜெனோயன் | சித்திரம் | வர்த்தகம் | தமிழ்<br>விஞ்ஞானம்<br>வரலாறு |
| 111 | ந.தசாங்கன் | | | வர்த்தகம் |
| 112 | சி.தனுசா | | | குடியியல் |
| 113 | இ.சுபாசினி | | மனைப் பொருளியல் | நடனம் |
| 114 | பு.ஜெனீபா | நடனம் | | |
| 115 | க.சாயிதா | மனைப் பொருளியல் | | |
| 116 | யோ.லிதுசன் | | சித்திரம் | |
| 117 | இ.சங்கீர்த்தனா | | | மனைப் பொருளியல் |

| இல | மாணவர் பெயர் |
|---|---|
| 118. | ச.லட்சியா |
| 119. | ஞா. திவாகரன் |
| 120. | இ. நிதர்சன் |
| 121. | இ. கஸ்தூரரி |
| 122. | கு.டுவாரதா |
| 123. | இ. பிரியந்தினி |
| 124. | மௌ. தர்சிகா |
| 125. | ம. வலன்ரீனா |
| 126. | பா.பிரியதர்சினி |
| 127. | சி.சிந்துயா |
| 128. | இ.வனோஜா |
| 129. | ஜீ. ஷம்சிகா |
| 130. | இ. கல்யாணி |
| 131. | ச.லதுசன் |
| 132. | T. அம்மினதாப் |
| 133. | ப.பத்மலோஜன் |
| 134. | ந. ஜெயநிசாந்தன் |
| 135. | வி.விதுதரன் |
| 136. | இ. கல்யாணி |

# 2014 A/L இல் பரிசு பெறும் மாணவர் விபரம்

| இலக்கம் | மாணவர் பெயர் | முதலாமிடம் | இரண்டாமிடம் | மூன்றாமிடம் |
|---|---|---|---|---|
| 137 | தி.புஸ்பரூபன் | பொருளியல் கணக்கியல் | வர்த்தகம் | |
| 138 | கோ. அரவிந்தன் | வர்த்தகம் ஆங்கிலம் Git | கணக்கியல் | பொருளியல் |
| 139 | சி.சஞ்சீவன் | | பொருளியல் Git | கணக்கியல் வர்த்தகம் |
| 140 | ச.பிருந்தா | | சங்கீதம் | அரசியல் |
| 141 | ம.சசிந்தா | இந்து நாகரீகம் அரசியல் | தமிழ் | |
| 142 | கா.தனுசா | | அரசியல் | தமிழ் இந்து நாகரீகம் ஆங்கிலம் |
| 143 | து.அஜித்தா | புவியியல் சங்கீதம் | ஆங்கிலம் | |
| 144 | அ.அபிநயா | | இந்து நாகரீகம் புவியியல் | |
| 145 | ம.காயத்திரி | தமிழ் | | புவியியல் சங்கீதம் |
| 146 | இ. சாந்தினி | | | இந்து நாகரீகம் |
| 147 | ம.சசினா | நடனம் | | |
| 148 | ப.லக்சன் | | | Git |

# 2013 A/L இல் பரிசு பெறும் மாணவர் விபரம்

| இலக்கம் | மாணவர் பெயர் | முதலாமிடம் | இரண்டாமிடம் | மூன்றாமிடம் |
|---|---|---|---|---|
| 149 | பா.கஜீபன் | தமிழ் பொருளியல் | | இந்து நாகரீகம் |
| 150 | க.நிரோஜினி | அரசியல் | இந்து நாகரீகம் | தமிழ் |
| 151 | ச.சிந்துயா | இந்து நாகரீகம் ஆங்கிலம் Git | பொருளியல் தமிழ் | |
| 152 | கு.நிதுசனா | | Git | புவியியல் ஆங்கிலம் |
| 153 | த.தனுஷா | சங்கீதம் | தமிழ் | |
| 154 | க.சரணியா | | சங்கீதம் | |
| 155 | இ.சுவின்சன் | | ஆங்கிலம் | அரசியல் |
| 156 | ச.லவண்யா | புவியியல் | | |
| 157 | சு.சிவானுயா | | புவியியல் | Git |
| 158 | தே.சர்மிளா | | அரசியல் | |
| 159 | சி.தனுஸ்கரன் | கிறிஸ்தவம் | | |

# போட்டிகளில் பங்கு பற்றி சான்றிதழ் பெற்ற மாணவர் விபரம்

## வலயமட்டம் விளையாட்டு (2013)

| மாணவர் பெயர் | நிகழ்ச்சி | தரம் | நிலை |
|---|---|---|---|
| யோ.யோஷிகா | உயரம் | 6 | 3 |
| ப.நதீஸ் | 100m | 9 | 1 |
| | 200m | 9 | 2 |
| க.ரெபேக்கா | 200m | 9 | 3 |
| | நீளம் | 9 | 3 |
| வ.சுகன்யா | குண்டு | 8 | 3 |
| வ.சகானா | ஈட்டி | 8 | 3 |
| ஜெ.ஜெனோஜன் | தட்டு | 11 | 1 |
| த. லக்ஷனா | உயரம் | 11 | 3 |
| வி.பானுஜா | தடை தாண்டல் | 13 | 3 |
| கா.தனுசியா | தடை தாண்டல் | 13 | 3 |
| இ.சுவின்சன் | 200m | 13 | 1 |
| | 800m | 13 | 2 |
| சி.சஞ்சீவன் | 1500m | 13 | 3 |
| | தடை தாண்டல் | 13 | 2 |
| லே.வித்தியரூபன் | ஈட்டி | 13 | 2 |
| ம.சசினா | உயரம் | 13 | 2 |

# வலயமட்ட விளையாட்டு (2012)

| மாணவர் பெயர் | நிகழ்ச்சி | தரம் | நிலை |
|---|---|---|---|
| ஜெ.ஜெயசாளினி | 100m | 7 | 1 |
| இ. யனுசா | 400m | 10 | 1 |
| ஜெயப்பிரிதா | 100m | 10 | 2 |
| ஜெ. ஜெயக்குமார் | 100m | 8 | 1 |
| | நீளம் | 8 | 1 |
| அ.அர்ஜீன் | நீளம் | 8 | 3 |
| | 200m | 10 | 2 |
| | தடைதாண்டல் | 10 | 2 |
| ஜெ.அம்மினதாப் | 100m | 12 | 3 |
| ந.ஜெயநிசாந்தன் | தடைதாண்டல் | 12 | 2 |
| த. தார்மீகன் | நீளம் | 13 | 1 |
| | முப்பாய்ச்சல் | 13 | 1 |
| வே.வித்தியரூபன் | 400m | 13 | 3 |
| | தடை தாண்டல் | 13 | 3 |
| வி.பானுஜன் | தடைதாண்டல் | 13 | 3 |
| செ.கேசவன் | ஈட்டி | 13 | 3 |
| ச.கிருஷாந்தன் | 200m | 13R | 2 |
| இ. சுவின்சன் | 800m | 13R | 3 |
| | 400m தடைதாண்டல் | 13R | 2 |

## வலயமட்ட தமிழ் தினப் போட்டிகள்

| மாணவர் பெயர் | நிகழ்ச்சி | தரம் | நிலை |
|---|---|---|---|
| ஐ.சானுயா | தனியிசை | 7 | 1 |
| சு.அபிராமி | சிறுகதையாக்கம் | 11 | 2 |
| ஜெ.சோபனா | சிறுகதையாக்கம் | 13 | 1 |
| பு.கயானா | வாசிப்பு | 5 | 3 |
| ர.பிரியா | தனிநடனம் | 9 | 3 |
| | நாட்டுக்கூத்து | | 1 |

## வலய மட்ட ஆங்கில தினப் போட்டிகள்

| | | |
|---|---|---|
| சு.அபிராமி | Copy Writing | 2ம் இடம் |
| Primary | Rama | Third place |

1. Miss.S.Sobini
2. Miss.M. Mathumitha
3. Miss. J. Kishalini
4. Miss. A. Jaseeba
5. Miss. R. Sowmiya
6. Miss.S. Nilani
7. Miss.S. Luxsana
8. Miss.V. Suvetha
9. Miss.V. Olvia Dilaxshini
10. Mas. J. Loorsan

## வலயமட்ட சமூக விஞ்ஞானப் போட்டி (2013)

| | |
|---|---|
| சு.சுபாஸன் | 2ம் இடம் |

## சைவசமயப் போட்டிகள் (2013)

| | | |
|---|---|---|
| த.தனுசன் | கண்காட்சி | தேர்ச்சி |
| ம.யதுர்ஷன் | கண்காட்சி | தேர்ச்சி |
| வி.கீர்த்திகா | கண்காட்சி | தேர்ச்சி |

## நடனப் போட்டிகள்

| | |
|---|---|
| ஐ. ஐதுர்ஷனா | சிறப்புத்தேர்ச்சி |
| க. நிசாளினி | சிறப்புத்தேர்ச்சி |
| பு.ஜெனீபா | தேர்ச்சி |
| ஜெ. ஜெசிந்தினி | தேர்ச்சி |

## வலயமட்ட விவசாயக் குறுவினாப் போட்டிகள் (2012)

| | |
|---|---|
| கு.நிவேஜா | பாராட்டுச் சான்றிதழ் |
| சு.சுவிஷ்னா | பாராட்டுச் சான்றிதழ் |

## I C T போட்டிகள் (2013)

| | | |
|---|---|---|
| Level II | சு.சுபாஸன் | தேர்ச்சி |
| Level IV | இ.சுவின்சன் | தேர்ச்சி |

## வலயமட்ட அனர்த்த பாதுகாப்புப் போட்டி

| | |
|---|---|
| செல்வி கோ. தாரங்கினி | 5ம் இடம் (2012) |
| செல்வி கோ. தாரங்கினி | 2ம் இடம் (2013) |

# வலயமட்ட சிங்களப் போட்டிகள் (2013)

| மாணவர் பெயர் | நிகழ்ச்சி | நிலை |
|---|---|---|
| இ.யனுசா | எழுத்துப்பரீட்சை | 1 |
| யோ.சபினா | எழுத்துப்பரீட்சை | 1 |
| உ. உஷாந்தினி | எழுத்துப்பரீட்சை | 1 |
| அ.யூலிகா | பேச்சு | 1 |
| ஐ.சானுயா | வாசிப்பு | 2 |
| ஐ.ஐதுர்ஷன் | வாசிப்பு | 2 |
| இ.பிரியங்கா | பேச்சு | 2 |
| க.றெபேக்கா | பேச்சு | 2 |
| தி.திசா | வாசிப்பு | 2 |
| து.மதுஜா | எழுத்துப்பரீட்சை | 3 |
| ஜெ.ஜெயக்குமார் | வாசிப்பு | 2 |

# வலயமட்ட சிங்களப் போட்டிகள் (2012)

| மாணவர் பெயர் | நிகழ்ச்சி | நிலை |
|---|---|---|
| யோ.சமிதா | எழுத்துப்ரீட்சை | 1 |
| கி.நிலைக்சனா | எழுத்துப்ரீட்சை | 2 |
| அ.கெர்சிகா | பேச்சு | 2 |
| றொ.நிரூஜனா | வாசிப்பு | 1 |
| து.மதுஜா | எழுத்துப்பரீட்சை | 2 |
| ம.மதுசா | பேச்சு | 1 |
| இ.பிரியங்கா | பேச்சு | 2 |
| வ.றொசினா | வாசிப்பு | 1 |
| ஐ.சானுஜா | வாசிப்பு | 2 |
| உ.உஷாந்தினி | எழுத்துப்பரீட்சை | 1 |
| த.கீர்த்தனா | எழுத்துப்பரீட்சை | 2 |
| வ.சகானா | பேச்சு | 1 |
| இ.அனந்தா | வாசிப்பு | 1 |
| ஜெ.ஜெயக்குமார் | வாசிப்பு | 2 |
| யோ. சபினா | எழுத்துப்பரீட்சை | 1 |
| செ.டினிஷா | எழுத்துப்ரீட்சை | 2 |

| | | |
|---|---|---|
| ர.பிரியா | எழுத்துப்பரீட்சை | 1 |
| க.ரெபேக்கா | பேச்சு | 2 |
| அ.அஜினா | பேச்சு | 3 |

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2013

### 100 இற்கு மேல் புள்ளி பெற்றோர்

| | |
|---|---|
| ஸ்ரீ.கதிர்விழி | 178 |
| பு.கஜானா | 166 |
| வி.சுவேதா | 160 |
| ஜெ.ஒல்வியா டிலக்சினி | 150 |
| ச. நிலானி | 138 |
| அ.இமின்சிகா | 123 |
| கு.விதுர்சிகா | 122 |
| ஜெ.லூர்சன் | 119 |
| ச.சஞ்சித் | 106 |
| ச.சங்கீதா | 106 |

## வலயமட்ட கோலப் போட்டிகள்

| | | |
|---|---|---|
| தரம் 3 | ச. மீனுயா | சிறப்புத்தேர்ச்சி |
| | யோ.பிரியங்கா | சிறப்புத் தேர்ச்சி |

## வலயமட்ட வாய்ப்பாட்டுப் போட்டிகள்

| | | |
|---|---|---|
| தரம் 4 | ஜெ. கிசாளினி | சிறப்புத்தேர்ச்சி |
| தரம் 5 | பு.கயானா | சிறப்புத்தேர்ச்சி |
| | ஸ்ரீ. கதிர்விழி | சிறப்புத்தேர்ச்சி |
| | ச. நிலானி | சிறப்புத்தேர்ச்சி |
| | வி.சுவேதா | சிறப்புத்தேர்ச்சி |

## வலயமட்ட IMACS போட்டிகள்

| | |
|---|---|
| ஸ்ரீ.கதிர்விழி | சிறப்புத்தேர்ச்சி |
| பு. கஜானா | சிறப்புத்தேர்ச்சி |

## மகுட வாக்கியம்

"ஒழுக்கமும் கல்வியும் உயிரெனப்படும்"

## VISION - நோக்கு

"மாறி வரும் சமூகக் கட்டமைப்புகளுக்கு அமைவாக இணைந்து செல்லக்கூடிய பிரஜைகளை உருவாக்குதல்"

## MISSION - பணிக்கூற்று

"வளங்களை ஒன்றிணைந்து மாற்றங்களை உள்வாங்கி அறிவு திறன், மனப்பாங்கு கொண்ட நற்பிரஜைகளை உருவாக்கும் விதத்தில் கல்வி நடவடிக்கைகளை வடிவமைத்து செயற்படுத்துதல்"













தீபம் பிறின்டேர்ஸ், 717, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். T.P : 0772506234